**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்**

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
வள்ளியூர்

2025 ஆம் வருடம் நவம்பர் மாதம் 20-ஆம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் கார்த்திகை மாதம் 04-ம் நாள் வியாழக்கிழமை

இ.ம.எண்.06/2025 ன் அ.வ.எண்.68/2019

1) பால்கனி அம்மாள்

2) செல்வன் ... மனுதாரர்கள் / 1,3 பிரதிவாதிகள்

/எதிர்/

1) ஜெயா

2) ஜான்சி

3) மல்லிகா ... எதிர்மனுதாரர்கள் /வாதிகள்

4) ராஜன்

5)செல்வராஜ்

6) ஜான்சன்

7) சந்திரபிரபா

8) அலிஸ்ரூபி

9) பாரதி

10) திலகர்

11) சுபாஸ்கர்

12) செல்வன்

13) லாயிட் ... எதிர்மனுதாரர்கள்/2, 4 முதல் 12 பிரதிவாதிகள்

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.12.02 11:59:13 +0530

இம்மனுவானது 04.11.2025 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கல்யாணகுமார் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ஆனந்தராஜ் அவர்கள் ஆஜராகியும், 9 வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கல்யாணகுமார் அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 8, 10 முதல் 13 எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும், இரு தரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7ன்கீழ் அசல் வழக்கில் மனுதாரர்கள் /1,3 பிரதிவாதிகளுக்கு எதிராக 19.06.2019 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:**

இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் 1, 3 பிரதிவாதிகள். அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.12.02 11:59:21 +0530

வழக்கில் மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தில் 19.06.2019 ல் ஆஜராக வேண்டி அழைப்பாணை சார்பு செய்யப்பட்டது. அவ்வாறு அழைப்பாணை பெறப்பட்ட பின்பு 1 முதல் 3 எதிர்மனுதாரர்களை நேரில் சந்தித்து சமாதானம் பேசியதில் தாங்கள் தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கை வாபஸ் பெற்ற விடுவதாக தெரிவித்தார்கள். அதன் காரணமாக 19.06.2019 ல் இந்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. தற்போது வழக்கு 8 ம் பிரதிவாதி மனுதாரர்களை சந்தித்து பேசியபோதுதான் வழக்கு நடந்து வருகிற விபரம் குறித்து தெரியவந்தது. 1 முதல் 3 எதிர்மனுதார்களை மனுதாரர்களிடம் வழக்கை வாபஸ் பெற்றுவிடுவதாக தெரிவித்ததன் காரணமாகத்தான் மனுதாரர்கள் 19.06.2019 ல் இந்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் நல்ல கட்சி உள்ளது. எனவே, 19.06.2019 அன்று அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டி இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்சாற்றுரையின் சுருக்கம்

மனுதாரரின் மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கது அல்ல. மனுதாரரால் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் உண்மையல்ல. 1 முதல் 3 எதிர்மனுதாரர்களிடம் பாகப்பிரிவினை வழக்கு சம்மந்தமாக ஒருகாலமும் சமாதானம் பேசியதில்லை. அசல் வழக்கானது தற்போது இறுதி கட்டத்தை எட்டியுள்ளதால்

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.12.02 11:59:28 +0530

இந்த வழக்கை காலதாமதப்படுத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

<u>இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?</u>

3) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில் 19.06.2019 அன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததற்கு மனுதாரர்கள், 1 முதல் 3 எதிர்மனுதாரர்களை நேரில் சந்தித்து சமாதானம் பேசியதில் தாங்கள் தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கை வாபஸ் பெற்ற விடுவதாக தெரிவித்தார்கள். எனவே, மனுதாரர்கள் /1,3 பிரதிவாதிகள் 19.06.2019 ல் இந்நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என காரணம் தெரிவிக்கப்பட்ட போதிலும், மேற்படி காரணத்தை நிரூபிக்க வாய்மொழி மற்றும் ஆவண சான்றுகள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

இருப்பினும், அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கின் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்காகவும், மனுதாரருக்கு வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதாலும், மனு தள்ளுபடி செய்யபட்டால் மனுதாரர் பாதிக்கப்படுவார் என்பதாலும், அதனால் பல மனுக்கள் தாக்கல் செய்ய நேரிடும். மனு அனுமதிப்பதினால் எதிர்மனுதாரர்களுக்கு எந்த தீங்கும் ஏற்படாது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.12.02 11:59:35 +0530

இறுதியாக, இம்மனுவானது ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் /1,3 பிரதிவாதிகள் மேற்படி தொகையை 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 04.12.2025 தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 05.12.2025.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ம் வருடம் நவம்பர் மாதம் 20-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.12.02 11:59:41 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்</u>: இல்லை

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.12.02 11:59:48 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.

**மு.மா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்,**

**வரைவு, சீரான உத்தரவு**

**இ.ம.எண்.**06/2025 **இன்**

**அ.வ.எண்.**68/2019

**தேதி.**20.11.2025